தளி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. து. செல்வராஜ் அவர்கள் 1996 முதல் 2001 வரை உடுமலைப்பேட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, திறம்பட பணியாற்றினார்கள்.

திரு. நா.சா. பழனிசாமி அவர்கள் 1991 முதல் 1996 வரை கிணத்துக்கடவு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. நா. நாச்சிமுத்து கவுண்டர் அவர்கள் 1967 முதல் 1971 வரையிலும் மற்றும் 1971 முதல் 1976 வரையிலும் இரண்டு முறை ஒட்டன்சத்திரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பான முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானம்

உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. எஸ்.எம். சீனிவேல் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானம்.

“மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தொகுதியிலிருந்து 15-வது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், 2001 முதல் 2006 வரை திருப்பரங்குன்றம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத்

2016 ஜூன் 17] [பேரவைத் தலைவர்]

தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்பட பணியாற்றியவரும், மக்கள் நலப் பணிகளை சிறப்புடன் ஆற்றியவருமான திரு. எஸ்.எம். சீனிவேல் அவர்கள், திடீரென ஏற்பட்ட உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், 25-5-2016 அன்று மறைவுற்ற செய்தியினை அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. மறைந்த திரு. எஸ்.எம். சீனிவேல் அவர்கள், சாதாரண தொண்டராக இருந்து பல்வேறு பொறுப்புகளை வகித்து, கழகப் பணிகளை ஆற்றியவர். தான் சார்ந்துள்ள கட்சியின்மீதும், கட்சியின் தலைமைமீதும் மிகுந்த அன்பும், அளப்பரிய விசுவாசமும் கொண்டு பணியாற்றி வந்தார். அன்னாரது மறைவால், அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றுமுகத்தானும், மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும்வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் 20-6-2016 (திங்கட்கிழமை) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10-05 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

* * *